**TYPE:**

ஓட்டம்

கதை, திரைக்கதை, இயக்கம்
பேயோன்

**SELECT ALL, DELETE.**

**TYPE:**

இசை
"Junk Science"
Written & Performed by:
Derek R. Audette - (C) MMV
(Socan)

**SELECT ALL, DELETE.**

**TYPE:** எல்லோரும் எல்லாமும் அடங்கிவிட்டிருந்த இரவு.

**CUT** எல்லாமும்

**PASTE IT BEFORE** எல்லோரும்

**TYPE:** இவன் தெருவில் நடந்துகொண்டிருந்தான். லேசாகத் தூறத் தொடங்கியது. ஒரு திருப்பத்தில் நிலாவைப் பார்த்தவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. நிலா அவனையே பார்த்துக்கொண்டிருந்தது. மூடியிருந்த ஒரு கடையின் வாசற்படிக்குச் சட்டென ஒதுங்கினான். அறையும் இதயத்துடன் மெல்ல ஐம்பது வரை எண்ணிவிட்டு எட்டிப் பார்த்தான். நிலா இன்னமும் இவனையே பார்த்துக்கொண்டிருந்தது. இன்றைக்கு சிக்கினோம் என மீண்டும் கடை வாசலில் பதுங்கிக்கொண்டான்.

**TYPE:** இப்போது மழையாகிவிட்டிருந்தது. காற்று மழையை எல்லா பக்கமும் வீசிக்கொண்டிருந்தது. கடையின் சிறிய நிழற்கூரையை லட்சியம் செய்யாமல் மழை இவனை நனைக்கத் தொடங்கியது. இன்னும் சிறிது நேரம் நின்றால் முழுவதும் நனைந்துவிடுவோம் என அங்கிருந்து விலகித் தெருவில் இறங்கினான்.

**PAUSE 1 SEC.**

**CUT** எல்லோரும்

**PASTE IT BEFORE** எல்லாமும்

**TYPE:** மழையும் காற்றும் நிலாவை மறக்கச் செய்திருந்தன. தெருவில் இறங்கியதும் தலையெடுத்த நிலாவின் குளிர்ந்த சுவாசத்தைத் தொப்பல் முதுகில் உணர்ந்து பய வியர்வை மழைநீரில் கலக்க ஓடத் தொடங்கினான்.

**TYPE:** கடைகளைக் கடந்ததும் முதல் வீட்டின் கதவுகளைத் தட்டினான். பிறகு அடுத்தடுத்த வீடுகளின் கதவுகளைத் தட்டினான். கதவைத் திற, காப்பாற்று என்று அலறினான். சில மாடி வீடுகளில் ஜன்னல்கள் அரைத் தூக்கத்தில் திறந்தன. திறந்திருந்தவை மூடின. பாதி இடித்துவிட்டு நிறுத்தப்பட்டிருந்த வீடு ஒன்று கண்ணில் பட்டது. அதை நோக்கிப் பாய்ந்தான். சமையலறை மட்டும் இடிபடாமல் இருந்தது.

**DELETE:** சமையலறை மட்டும் இடிபடாமல் இருந்தது.

**REPLACE IT WITH:** சமையலறைக்குக் கூரை மிச்சமிருந்தது.

**DELETE:** அரைத் தூக்கத்தில் திறந்தன

**REPLACE IT WITH:** அரைகுறையாகக் கண் விழித்தன

**DELETE:** பாதி இடித்துவிட்டு நிறுத்தப்பட்டிருந்த வீடு

**REPLACE IT WITH:** பாதி இடித்த வீடு

**TYPE:** ஈரக்கையை நனைந்த ஆடையில் அழுத்தித் துடைத்துக்கொண்டு பாக்கெட்டில் கையை நுழைத்தான். சிகரெட் நன்றாக நனைந்திருந்தது.

**INSERT BETWEEN** சிகரெட் **AND** நன்றாக**:** பாக்கெட்

**TYPE:** அதில் இருந்த ஒரு சிகரெட்டை வெளியில் எடுத்தான்.

**SELECT:** தில் இருந்த

**UNSELECT.**

**DELETE:** ஒரு

**REPLACE IT WITH:** ஒரே

**PAUSE.**

**TYPE:** ஃபில்டர் பகுதி மட்டும் ஈரமாக இருந்தது. ஃபில்டரைக் கிள்ளியெறிந்துவிட்டு சிகரெட்டை உதட்டில் வைத்தான். இடது பேன்ட் பாக்கெட்டிலிருந்து தீப்பெட்டியை எடுத்தால் குச்சிகள் மட்டுமே நனையாமல் இருந்தன.

**PAUSE.**

**CURSOR TENTATIVELY MOVES AFTER** நனையாமல்**, THEN BEFORE IT, AND THEN AFTER THE END OF THE SENTENCE.**

**TYPE:** வெறுப்புடன் தூக்கி வீசிவிட்டு அப்படியே ஈரத் தரையில் உட்கார்ந்தான். கைக்கடிகாரத்தில் மணி 12. **PAUSE.** 40. **PAUSE.** தெரு விளக்கொளியில் பளபளத்து ஓடிய மழை **PAUSE** நீரை வெறித்துக்கொண்டிருந்தான். **PAUSE. DELETE:** வெறித்துக்கொண்டிருந்தான் **REPLACE IT WITH:** ப் பார்த்துக்கொண்டிருந்தான் **TYPE:** மழையின் சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. **PAUSE 1 SEC.**

**DELETE:** மழையின்

**REPLACE IT WITH:** மழைச்

**PAUSE.**

**DELETE:** மழைச்

**REPLACE IT WITH:** மழையின்

**MOVE TO FIRST LINE. LONG PAUSE. TENTATIVELY SELECT AND UNSELECT** எல்லாமும் எல்லோரும் அடங்கிவிட்டிருந்த.

**DELETE:** எல்லாமும் எல்லோரும் அடங்கிவிட்டிருந்த இரவு.

**REPLACE IT WITH:** ஓரிரவு எல்லாம் அடங்கிய பின்

**GO TO PARA 1: PRESS ENTER AFTER** நிலா அவனையே பார்த்துக்கொண்டிருந்தது. **PAUSE.**

**SCROLL DOWN SLOWLY.**

**DELETE:** ஃபில்டரைக்

**REPLACE IT WITH:** அதைக்

**DELETE:** உதட்டில்

**REPLACE IT WITH:** வாயில்

**PAUSE.**

**SELECT AND UNSELECT** வாயில்

**SCROLL UP.**

**DELETE:** கதவைத் திற, காப்பாற்று என்று

**REPLACE IT WITH:** காப்பாற்றுங்கள் என

**SCROLL UP.**

**DELETE:** நிலாவை

**REPLACE IT WITH:** நிலவை

**DELETE:** நிலாவின்

**REPLACE IT WITH:** நிலவின்

**PAUSE.**

**SCROLL DOWN. LONG PAUSE.**

**CUT:** மழையை

**PASTE BEFORE:** காற்று **APPEND** க்

**MOVE TO BOTTOM.**

**MOVE TO TOP.**

**ENTER TITLE:** புனைவு

**MOVE TO BOTTOM.**

**SELECT ALL. DELETE.**

**TYPE:** முற்றும்

**STOP.**